**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S.No. 115 of 2017

| | | |
|---|---|---|
| Name | திரு. அந்தோணி சாமி | பி.வா.சா.1 |
| Father's Name | மிக்கேல் | |
| Village | கானார்பட்டி | |
| Taluk | மானூர் | |
| Calling | கூலி | |
| Age | 56 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.02.2021

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

முந்தைய வழக்கில் வாதி நீதிமன்ற ஆணையர் அளந்த போது உரிமை மூல ஆவணங்களை வைத்து அளக்க சொன்னார் என்றால் நினைவில்லை. ஆவணங்களை வைத்து தான் அளக்க வேண்டும் என வாதி சொன்னார் எனவும் அதற்கு எங்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்து அளக்க விடாமல் தடுத்து விட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் அவ்வாறு தடுத்ததால் தான் ஆணையர் ஆவணப்படி அளக்காமல் அது பற்றி அறிக்கையிலும் தெளிவாக குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1942 ல் எனது அப்பா கிரையம் வாங்கிய பத்திரத்தில் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 57 செண்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.3 ஆவணத்திலும் 2 ஏக்கர் 57 செண்டு தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். யோசேபு வாதிக்கு எழுதி வைத்த உயில் ஆவணமான வா.சா.ஆ.1 லும் 2 ஏக்கர் 57 செண்டு தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புல எண். 189 ஐ உட்பிரிவு செய்த போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். உட்பிரிவு செய்த போது அறிவிப்பு வந்ததா இல்லையா என்ற விவரம் எனது அப்பாவை கேட்டால் தான் தெரியும் என்றால் நான் உடன் இருந்ததால் எனக்கும் தெரியும். உட்பிரிவு பற்றிய அறிவிப்பு எனது அப்பாவிடம் இருந்தால் அதனை தாக்கல் செய்யலாமா என்றால் உட்பிரிவு பற்றி

அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. உட்பிரிவு செய்யப்பட்ட போது வாதிக்கு எந்த வித அறிவிப்பும் கொடுக்கப் படவில்லை எனவும் உட்பிரிவு செய்த போது தாவா சொத்தின் அளவுகளையும் தவறுதலாக 4 செண்டு என பதிவு செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல. 4 செண்டு என தவறுதலாக உட்பிரிவு செய்யப்பட்டதை சாதகமாக பயன் படுத்தி கொண்டு பொய் கட்சி செய்து வருகிறனே் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் நகைகளை விற்று தான் தாவா சொத்தும் மற்றும் இதர சொத்துக்களையும் வாங்கியதாக பொய்யாக கட்சி செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிர் வழக்குரையில் எனது தாத்தா யோசேபு மற்றும் பாட்டி அன்னம்மாள் இறந்த போது வாதி வரவே இல்லை எனவும் எனது அப்பா தான் இறுதி சடங்குகளை செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தின் அனுபவத்தில் நான் தான் இருப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் மூல ஆவணங்களின் அடிப்படையிலேயே வாதிக்கு 1 ஏக்கர் 28 1/2 செண்டு பாத்தியம் என்றால் சரியல்ல. வாதி தற்போது நோய் வாய் பட்டிருப்பதால் அதனை அபகரிக்க வேண்டும் என பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.